*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.03*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Issue DOI: https://doi.org/10.63300/tm07042026

# Defense mechanisms of the male characters portrayed by S.Ramakrishnan

**K.Priya Maheswari*,**
Ph.D. Research Scholar, Department of Tamil, Madras Christian College, Tambaram, Chennai, Tamil Nadu, India.
*Correspondence: priyamaheswari1995@yahoo.com

**Article Info**
Received on 21-Mar-2026, Revised on 27-Mar-2026, Accepted on 27-Mar-2026, Published on 01-April-2026

## ABSTRACT

Tamil short stories have a rich history of over a hundred years. The modern Tamil short story genre began with Va.Ve. Subramaniya Iyer. In the 1940s, there was a surge in the publication of Tamil short stories, thanks in part to the efforts of magazines and journals. In 1933, Anandha Vikatan magazine held a short story competition, which became a turning point in the evolution of the modern Tamil short story. Many new writers came forward with their stories. Tamil short stories have been used to depict the struggles and experiences of ordinary people in a realistic way. For example, writers like Puthumaipithan, La.Sa. Ramamirtham, Mauni, wrote short stories that depicted the struggles of ordinary people during the Manikodi and Ezhuthu periods. Even in the 1990s, writers like S. Ramakrishnan wrote short stories that explored the psychological experiences of ordinary people. Particularly his male characters struggle a lot to come across their inner feelings. For example, the male character in "Ilathavargal Thandha Amudham" is unable to cope with humiliation and the male character in "Pappuvin Kaalani" misses his daughter after she gets married. These characters express some weird behaviours when they are confronted with anxiety and frustration. The aim of this research paper is to find the reasons behind the weird behaviors expressed by those characters.

***KEYWORDS:*** *Defense Mechanisms, Self, Withdrawal, Displacement, Passive Aggression, Denial.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 04 (April -2026)*
**www.tamilmanam.in**
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.03*

# எஸ்.ராமகிருஷ்ணன் சித்திரித்த ஆண் மாந்தர்களின் காப்பு உத்திகள்

*கி.ப்ரியா மகேசுவரி, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ்ச் சிறுகதை இலக்கியம், நூறாண்டுகளுக்கும் மேலான வரலாற்றினைக் கொண்டுள்ளது. வ.வே.சு. ஐயரின் காலத்திலிருந்து 1940 வரையிலுள்ள கால கட்டத்தினைச் 'சிறுகதைகளின் காலம்' என்று அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். இந்தக் காலகட்டத்தில் இதழ்களின் பங்களிப்பு சிறுகதையின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாகத் திகழ்ந்தது. 1933இல் ஆனந்த விகடன் நடத்திய சிறுகதைப் போட்டி, நவீன சிறுகதை எழுத்தாளர்கள் தோன்றுவதற்குத் தொடக்கப் புள்ளியாக அமைந்தது. இதற்குப்பின், மணிக்கொடி, எழுத்து ஆகிய இதழ்களின் வழி சிறுகதை இலக்கியம் முறையான வளர்ச்சியைப் பெறத் தொடங்கியது. புதுமைப்பித்தன், கு.ப.ரா., க.நா.சு., மௌனி, லா.ச.ரா. ஆகியோரது சிறுகதைகள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றன. குறிப்பாக, தனிமனித வாழ்க்கைச் சிக்கல்களை மையமாகக் கொண்ட கதைகள் வாசகர்களிடையே மதிப்பைப் பெற்றன. இதன் தொடர்ச்சியாகப் பல்வேறு கதைகள் வாழ்வின் அவலங்களையும் அவற்றை எதிர்கொள்ளும் மனிதர்களின் மனநிலைகளையும் சித்திரிப்பனவாக அமைந்தன. மௌனியின் எழுத்தின் வழி தொடங்கிய வாழ்க்கைச் சிக்கல் குறித்த சித்திரிப்புகள், லா.ச.ரா., கு.அழகிரிசாமி, ஜெயகாந்தன் ஆகியோரின் எழுத்துகளில் ஆழம் பெறத் தொடங்கின என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களைத் தொடர்ந்து வந்த எழுத்தாளர்கள் மனித மனங்களின் மீது தங்களது கவனத்தைத் திருப்பினர்; வீட்டுச்சூழல்களும் சமூகச்சூழல்களும் மனிதனுக்குத் தரும் நிர்பந்தங்களைக் குறித்து எழுதத் தொடங்கினர். இந்நிலையில் 1990களில் எழுத வந்த எழுத்தாளர்களுள் மனிதனின் அகச்சிக்கல்களைக் குறித்து எழுதியவர் எஸ்.ராமகிருஷ்ணன். இவர் சிறுகதைகள், புதினங்கள், கட்டுரைகள், வரலாற்று நூல்கள் ஆகியவற்றை எழுதியுள்ளார். இவர் சித்திரித்த மாந்தர்கள் எதார்த்தத்தைப் பிரதிபலிப்பவர்களாக இருக்கிறார்கள். குறிப்பாக, இவரது ஆண் மாந்தர்கள் பிரமிப்பை ஏற்படுத்தும் கதாநாயகர்களைப் போல சித்திரிக்கப்படாமல் எதார்த்த வாழ்வில் இருக்கும் ஆண்களாக உருவாக்கப்பட்டுள்ளனர். உறவின் பிரிவைக் கடந்து செல்லுதல், அவமானத்தை எதிர்கொள்ளுதல் போன்றன அம்மாந்தர்களின் மிகப்பெரும் சவால்களாக இருக்கின்றன. வறுமையின் பிடியில் சிக்கியிருப்பவருக்கு ஏற்படும் அவமான உணர்வினை 'இல்லாதவர்கள் தந்த அமுதம்' என்ற கதையின் மாந்தரும்; தான் அன்போடு வளர்த்த மகளைப் பிரிந்து வாழும் தந்தையின் துயரினைப் 'பப்புவின் காலணி' என்ற கதையின் மாந்தரும் வெளிப்படுத்துபவர்களாக உள்ளனர். எஸ்.ராமகிருஷ்ணன் சித்திரித்த இத்தகைய ஆண் மாந்தர்கள்

தங்களது மனத்துயரங்களைக் எதிர்கொள்ளும் போது மனப்போராட்டங்களுக்கு ஆளாகின்றனர். அச்சூழல்களில் அவர்கள் சில நடத்தைகளை வெளிப்படுத்துகிறார்கள். அவை புரிந்துகொள்ள முடியாதவையாக அமைகின்றன. அந்நடத்தைகளை உளவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆராய்ந்து விளக்குவதே இவ்வாய்வின் நோக்கமாகும். உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டினுள் விளக்கப்படும் ஒரு செயல்முறையான 'காப்பு உத்திகளின்' (Defense Mechanisms) அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்காப்பு உத்திகளைக் குறித்து ஆராய்ந்தவர்களுள் ஒருவராக ஜார்ஜ் எமான் வையலன்ட் திகழ்கிறார். இவர் பல்வேறு காப்பு உத்திகளைக் குறித்து விளக்கி, அவற்றை நான்கு வகைகளாகப் பிரித்துப் பாகுபாடு செய்துள்ளார். இவரது வகைப்பாட்டினை அடிப்படையாக வைத்து இவ்வாய்வின் முடிவு அமைக்கப்பட்டுள்ளது.

**கலைச்சொற்கள்:** காப்பு உத்திகள், சுயம், பின்வாங்குதல், மடைமாற்றம், மறைமுகக் கோப வெளிப்பாடு, மறுத்தல்

**முன்னுரை**

தமிழில் தோற்றம் பெற்ற உரைநடை இலக்கிய வடிவங்களுள் ஒன்று சிறுகதை இலக்கிய வடிவமாகும். இச்சிறுகதை இலக்கியத்தின் முறையான வரலாறு 1930களில் இருந்து தொடங்குகிறது. இவ்விலக்கிய வளர்ச்சிக்கு பெரிதும் துணை புரிந்தவை இதழ்களே. நவசக்தி, விமோசனம், ஆனந்த விகடன், பிரசண்ட விகடன், சுதந்திர சங்கு, லோகோபகாரி, காந்தி, தமிழ்நாடு, ஊழியன் எனப் பல தமிழிதழ்கள் சிறுகதைகளை வெளியிட்டன. 1933இல் ஆனந்த விகடன் நடத்திய சிறுகதைப் போட்டியில் பல புதிய சிறுகதை எழுத்தாளர்கள் அறிமுகமாயினர். அவ்வெழுத்தாளர்களுள் ஒருவர் ராமையா. இவரது முயற்சியால் உருவான இதழ் மணிக்கொடியாகும். இவ்விதழின் விடாமுயற்சியால் பல எழுத்தாளர்களின் சிறுகதைகள் பிரசுரமாயின. புதுமைப்பித்தன், கு.ப.ரா, மௌனி, லா.ச.ரா ஆகியோர் மணிக்கொடி கால எழுத்தாளர்களாகத் திகழ்கின்றனர். இவர்களுக்குப் பின் பல எழுத்தாளர்கள் தோன்றித் தமிழ்ச் சிறுகதை இலக்கிய வளத்தை மேம்படுத்தியுள்ளனர். அத்தகைய எழுத்தாளர்கள் வரிசையுள் இன்றியமையாதவராகத் திகழ்பவர் எஸ்.ராமகிருஷ்ணன். 1980களில் எழுத வந்த இவர் ஆனந்த விகடனில் மாணவப் பத்திரிகையாளராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் சிறுகதைகள் மட்டுமல்லாமல் புதினங்கள், கட்டுரைகள், வரலாற்று நூல்கள் எனப் பல படைப்புகளைத் தமிழிலக்கிய உலகிற்கு நல்கியுள்ளார். எழுத்துப் பணியை தமது முழு நேரப் பணியாகக் கொண்ட இவர் பத்துக்கும் மேற்பட்ட சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார். அவற்றுள் சிகப்பு மச்சம், மழைமான், பதினெட்டாம் நூற்றாண்டின் மழை, அவளது வீடு, புத்தனாவது சுலபம், சைக்கிள் கமலத்தின் தங்கை ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். இவரது

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.03*

கதைகளில் வரும் ஆண் மாந்தர்கள் மெல்லிய அகவுணர்வுகளை வெளிப்படுத்துபவர்களாகவுள்ளனர். இவர் சித்திரித்த ஆண்களின் நடத்தைகள் மறைக்கப்பட்ட மனவுணர்வுகளின் வெளிப்பாடுகளாகவே அமைகின்றன. அந்நடத்தைகளை உளவியல் கோட்பாட்டு கூறுகளுள் ஒன்றான காப்பு உத்திகளின் அடிப்படையில் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். 'இல்லாதவர்கள் தந்த அமுதம்' மற்றும் 'பப்புவின் காலணி' ஆகிய இரு சிறுகதைகள் இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இக்கதைகளில் இடம்பெறும் ஆண் மாந்தர்களின் நடத்தைகள் ஆய்வின் அடிப்படை தரவுகளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**எஸ்.ராமகிருஷ்ணன் படைப்புகள்**

தற்காலச் சிறுகதைப் படைப்பாளர்களுள் குறிப்பிடத்தக்கவராக இருப்பவர் எஸ்.ராமகிருஷ்ணன். இவர் தம் இளம் வயதிலிருந்து இலக்கியங்களின் மீது ஆர்வம் கொண்டவராக இருந்துள்ளார். ஓர் எழுத்தாளனால் சமுதாயத்தை மாற்ற முடியும் என்ற எண்ணத்தைக் கொண்டவராக இவர் திகழ்கிறார்.

> **"எழுத்தாளனாக இருப்பது என்பது ஒரு பொறுப்புணர்வு. எழுத்தாளன் தனது சிந்தனைகள், படைப்புகள், செயல்பாடுகள் வழியாகச் சமூகத்தை மேம்படுத்துகிறான் என்பதற்காகவே கொண்டாடப்படுகிறான்" (எழுத்தே வாழ்க்கை, பக்.27)**

என்பதிலிருந்து எஸ்.ராமகிருஷ்ணன் எழுத்தாளர்கள் மீது கொண்டிருந்த எண்ணத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது.

இவர் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை மட்டுமல்லாமல் நாவல்களையும் கட்டுரைகளையும் படைத்துள்ளார். இவர் படைத்த படைப்புகளுள் பெரும்பான்மையானவை எதார்த்த வாழ்க்கைச் சிக்கல்களைப் பிரதிபலிப்பனவாக அமைகின்றன. குறிப்பாக அவரது சிறுகதைகள் சமூகச் சிக்கல்களாலும் குடும்பச் சிக்கல்களாலும் பாதிக்கப்பட்டுள்ள ஆண் மற்றும் பெண் மாந்தர்களின் மனநிலைகளைச் சித்திரிப்பனவாக இருக்கின்றன.

எதார்த்தம் சார்ந்த படைப்புகள் மட்டுமல்லாமல் நவீனத்துவப் படைப்புகளையும் எஸ்.ராமகிருஷ்ணன் சித்திரித்துள்ளார். நவீனக் கோட்பாடுகளைத் தம் படைப்புகளில் முயற்சித்துப் பார்க்க வேண்டுமென்கிற ஆர்வம் இவருக்கு இருந்தது. அதன் விளைவாக பின் காலனித்துவம், பின் நவீனத்துவம், மாய எதார்த்தவாதம் சார்ந்த சிறுகதைகளை இவர் படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது வாசிப்பு மற்றும் பயண அனுபவங்கள் சார்ந்தே பெரும்பான்மையான படைப்புகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

> **"அவர் தம் வாசிப்பு, பயண அனுபவங்களினால் கட்டமைக்கப்பட்டது அவரது எழுத்துலகம். அவர் வாசிப்பு அனுபவம் விரிந்து பரந்தது. தான் வாசித்த நூல்களை**

**வாய்ப்பு கிடைத்த பொழுதெல்லாம் மற்றவர்களிடம் அவர் பகிர்ந்து கொண்டதை பிரமிப்பாய் வாசித்தவர்களும் தங்களிலும் தொத்திக் கொண்ட அவர் படிப்பறிவை நேசிக்கத் தலைப்பட்டார்கள்" (ந.பிச்சமூர்த்தியிலிருந்து எஸ்.ரா. வரை, பக்.249)**

என்ற கருத்து எஸ்.ராமகிருஷ்ணனின் எழுத்துலகையும் அவர் தமது வாசிப்பு அனுபவங்களை வாசகர்களிடம் பகிர்ந்து கொண்ட விதத்தையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது.

**எஸ்.ராமகிருஷ்ணன் சித்திரித்த ஆண் மாந்தர்கள்**

'இல்லாதவர்கள் தந்த அமுதம்' என்ற கதையில் வரும் சோமு, வறுமையான குடும்பத்தில் பிறந்தவனாகக் காட்டப்படுகிறான். கல்லூரியில் படிக்கும் இவனுக்கு இரு நண்பர்கள் இருக்கிறார்கள். அந்நண்பர்களின் கட்டாயத்தால் கோடை விடுமுறையில் தனது சொந்த ஊருக்கு அவர்களை அழைத்துச் செல்கிறான். வசதி வாய்ப்பு ஏதும் இல்லாத நிலையில் வெட்ட வெளியாய் இருக்கும் தன் சொந்த ஊர் அவனுக்கு ஓர் அவமானச் சின்னமாகத் திகழ்கிறது. தன் குடும்பத்தின் வறுமை நிலை மேலும் அவனது மனதில் கசப்புணர்வை ஏற்படுத்துகின்றது. இந்த நிலையில் சோமுவின் குடும்பத்தார் அவனது இரண்டு நண்பர்களுக்கும் நல்ல உணவளித்து உபசரிக்கிறார்கள். இந்த உபசரிப்பு அவனது மனதில் அதீத கோபவுணர்வை ஏற்படுத்த இறுதியில் அவன் தன் இரு நண்பர்களோடு சண்டையிட்டு கல்லூரிக்குச் சென்று தன் படிப்பைத் தொடர மறுத்து விடுகிறான்.

'பப்புவின் காலணி' என்ற கதையில் வரும் கதை சொல்லி தன் மகளுக்காகக் காலணிகளை வாங்கிச் சேகரித்து வைக்கும் வழக்கம் கொண்டவராக இருக்கிறார். குறிப்பாகப் பத்து வயது சிறுமி அணியக்கூடிய காலணிகளை அவர் தொடர்ந்து வாங்கிச் சேகரித்து வைத்து வருகிறார். தமது மகளுக்கு 37 வயது ஆகியும் பத்து வயது சிறுமிக்குரிய காலணிகளை அவர் சேகரித்து வைக்கும் செயல் அவரது மகளுக்கே வினோதமாகத் தெரிகிறது. தம் மகளைப் பிரிந்து வாழும் நிலையில், அவள் தன் பால்ய வயதில் விரும்பிய காலணிகளை அவளது நினைவாக அவர் வாங்கிச் சேகரித்து வைத்து வருபவராக இருக்கிறார்.

**காப்பு உத்திகள் – விளக்கம்**

மனிதனின் மனதை அறிய உதவும் ஒரு துறையாகத் திகழ்வது உளவியல்.

**"ஒருவன் உளக்கோளாறோ அல்லது உளநோயோ அடைவதற்குக் காரணம், அவன் தன்னைப் பற்றிக் கொண்டுள்ள எண்ணத்திற்கும், தான் இன்னவாறு இருக்க வேண்டும் என்று கொண்டுள்ள இலட்சியத்திற்கும் உள்ள வேறுபாடு ஆகும். இதனை ஆராய்ந்து உளக்கோளாற்றினைப் போக்க வழிகாட்டுவது உளவியல்" (இலக்கியமும் உளப்பகுப்பாய்வும், பக். 2)**

என்ற கருத்து உளவியல் துறையைப் பற்றி விளக்குகிறது.

இவ்வுளவியல் துறை சார்ந்த கோட்பாடுகள் பல தோன்றியுள்ளன. அக்கோட்பாடுகளுள் ஒன்று உளப்பகுப்பாய்வுக் கோட்பாடாகும். இக்கோட்பாட்டினை உருவாக்கிய சிக்மண்ட் ஃபிராய்டு நனவிலி மனம் குறித்த பல்வேறு கருத்துகளை வெளியிட்டுள்ளார்.

> **“இது நனவு மனதை விட முக்கியம் வாய்ந்தது. இதுவே ஆளுமையின் ஒரு கூறான இட்டின் (ID) நிலைக்களன் எனவும் இட்டினின்று வெளிப்படும் சக்தியை லிபிடோ என்றும் இச்சக்தி காம உணர்வை இயல்பாகக் கொண்டது எனவும் அதன் இயல்பும் பிறப்பால் அமைவன எனவும் கூறினார்” (இலக்கியமும் உளவியலும், பக்.6)**

என்கிற கருத்து ஃப்ராய்டு நனவிலி மனம் குறித்துக் கூறிய செய்தியாக அமைகிறது.

மேலும் இவர் மனித மனத்தை இட் (ID), ஈகோ (Ego), சூப்பர் ஈகோ (Super Ego) என மூன்று பிரிவுகளாகப் பாகுபாடு செய்துள்ளார். இவற்றுள் ஆசைகளை உள்ளடக்கிய பகுதி இட் ஆகும். சூப்பர் ஈகோ என்ற பகுதி சமூக விழுமியங்களைக் கொண்ட பகுதியாகும். இட்டிற்கும் சூப்பர் ஈகோவிற்கும் இடையில் நின்று செயல்படும் பகுதி ஈகோ என்னும் தன்முனைப்பு மனமாகும்.

இந்த ஈகோ என்னும் தன்முனைப்பு மனம், மனத்தின் நிறைவேறாத ஆசைகளால் உருவாகும் மனத்தவிப்பைப் போக்குவதற்குச் சில உத்திகளைக் கையாள்கிறது. அவை காப்பு உத்திகள் (Defense Mechanisms) என்று உளவியலாளர்களால் அழைக்கப்படுகின்றன.

> **“தேவைகள் மூலம் ஆசைகள் உருவாகி அதை அடைய எண்ணும் பொழுது மன இறுக்கம் அல்லது மன அழுத்தம் ஏற்படுகிறது. ஆசைகளின் செயற்பாட்டின் பொழுது வெற்றி கிட்டினால் மனநிறைவும் தோல்வி அடைந்தால் மனக்குறைவும் உண்டாகின்றன. இம்மனக்குறை மனத்தவிப்பாகவும் மனமுறிவாகவும் உரு பெறும் பொழுது மனப்போராட்டம் ஏற்படுகிறது. இந்த மனப் போராட்டத்தால் உள்ளச் சமநிலை பாதிப்படையும் பொழுது தன்முனைப்பு மனம் காப்பு உத்திகளைக் கையாள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது” (காஞ்சனா, பக்.69)**

பகற்கனவு (Fantasy), அடையாளம் காணல் (Identification), புறத்தெறிப்பு (Projection), விழுப்பமுடைமையாக்கல் (Sublimation), ஆழ்மனத்தில் புதைத்தல் (Repression), மறைமுகக் கோப வெளிப்பாடு (Passive Agression), மறுத்தல் (Denial), மடைமாற்றம் (Displacement), பின்னோக்கிப் போதல் (Regression) ஆகியன சில காப்பு உத்திகளாகக் கொள்ளப்படுகின்றன.

காப்பு உத்திகளைக் குறித்து முதலில் மொழிந்தவர் ஃபிராய்டு ஆவார். அவருக்குப் பின் அவரது மகளான அன்னா ஃபிராய்டு இக்காப்பு உத்திகளைக் குறித்து விரிவாக ஆராய்ந்து ஈகோ அண்ட் தி மெகானிசம்ஸ் ஆப் டிபன்ஸ் (Ego and the Mechanisms of defense) என்ற நூலை வெளியிட்டார். அவரைத் தொடர்ந்து பல உளவியலறிஞர்கள் இவ்வுத்திகளைக் குறித்து

ஆராய்ந்துள்ளனர். அவர்களுள் தற்கால உளவியல் அறிஞரான ஜார்ஜ் இமான் வையலன்ட் என்பவரும் ஒருவராவார். இவர் காப்பு உத்திகளை நான்கு வகைகளில் பாகுபாடு செய்துள்ளார். அவை முதிர்ச்சிப் பெற்ற காப்பு உத்திகள் (Mature defense mechanisms), முதிர்ச்சிப் பெறாத காப்பு உத்திகள் (Immature defense mechanisms), நரம்பியல் சார்ந்த காப்பு உத்திகள் (Neurotic defense mechanisms), நோயியல் சார்ந்த காப்பு உத்திகள் (Pathological defense mechanisms) என்பனவாகும். ஒவ்வொரு வகையும் சில காப்பு உத்திகளை உள்ளடக்கியதாகவுள்ளது. இன்றைய காலத்தில் இவ்வுத்திகளைச் சமாளிக்கும் உத்திகள் (Coping Mechanisms) என்று உளவியல் அறிஞர்கள் அழைக்கின்றனர்.

> **“இத்தகைய காப்பு உத்திகள் மனப்போராட்டங்களால் விளையும் மன இறுக்கம், மன முறிவு ஆகியவற்றைத் தவிர்க்கவும் கவலை, குற்றவுணர்ச்சி போன்றவற்றிலிருந்து காக்கவும் தான் என்ற தன்மை பாதிக்கப்படுவதிலிருந்து தடுக்கவும் உதவுகின்றன” (அருண்குமார், பக்.183)**

என்ற கருத்து காப்பு உத்திகளின் நோக்கங்களைக் குறிப்பிடுகிறது

காப்பு உத்திகளின் அடிப்படையில் இலக்கியங்களைத் திறனாய்வு செய்ய முடியும். உளவியல் அடிப்படையிலான இலக்கியத் திறனாய்வில் மிகவும் முக்கியம் வாய்ந்தது படைப்புகளுக்குள் மறைந்துக் கிடக்கும் நனவிலி சார் கருத்துகளைக் கண்டறிவதாகும்.

> **“நனவிலி இருப்பு இலக்கியத்தில் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை அறிய முற்படுகிறது. அதாவது அமுக்கப்பட்ட உள்ளார்ந்த உணர்வுகள் படைப்பாக்கத்தின் போது கலந்துக் கொள்கின்ற நிலைப்பாடு குறித்து ஆராய்கிறது” (புதுமைப்பித்தன் கனவும் உளப்பகுப்பாய்வு ஆய்வும், பக்.17)**

என்ற தி.கு.இரவிச்சந்திரனின் கருத்து இலக்கியத்தில் மறைந்திருக்கும் நனவிலி மனம் சார்ந்த செய்திகளைக் கண்டறிவதற்கு உளவியல் முற்படும் விதத்தை எடுத்துரைக்கிறது.

இவ்வாறு இலக்கியங்களுக்குள் புதைந்துக் கிடக்கும் நனவிலி மனம் சார்ந்த செய்திகளைக் கண்டறிவதற்கு உளவியல் கோட்பாட்டுக் கூறுகளுள் ஒன்றான காப்பு உத்திகள் உதவுகின்றன. குறிப்பாக இலக்கிய மாந்தர்களின் புரிந்து கொள்ள முடியாத நடத்தைகளை அறிவதற்குக் காப்பு உத்திகள் பயன்படுகின்றன.

**எஸ்.ராமகிருஷ்ணன் சித்தரித்த ஆண் மாந்தர்களின் காப்பு உத்திகள்**

‘இல்லாதவர்கள் தந்த அமுதம்’ என்ற கதையில் வரும் சோமு, தன் சொந்த ஊரையும் தன் வீட்டின் வறுமை நிலையையும் வெறுப்பவனாக இருக்கிறான். தன் நண்பர்களை வீட்டுக்கு அழைத்துச் செல்லும் வழியில் அவர்களுக்குள் நடைபெறும் உரையாடல்களின் வழி சோமுவின் மனத்தில் பதிந்திருந்த வெறுப்புணர்வை உணர முடிகிறது.

**“கட்டட வேலைக்காக மதுரைப்பக்கம் போயிட்டாங்க... இந்த பொட்டக்காட்ல இழுத்துகிடந்தா கூட வைத்தியம் பாக்க முடியாது. இங்க மனுசன் குடியிருப்பானா? எனக் கேட்டான் சோமு. (சிகப்பு மச்சம், பக்.105)**

**அவனுக்கு சொந்த ஊர் மீது, அதன் மனிதர்கள் மீது விவசாயத்தின் மீது பெருங்கோபம் இருந்தது. அவனது பேச்சில் அது வெளிப்பட்டபடியே இருந்தது” (பக்.105)**

என்னும் கூற்றுகள் சோமு தன் ஊரின் மீது கொண்டிருந்த வெறுப்புணர்வைப் புலப்படுத்துகின்றன.

இந்நிலையில், தன் இரு நண்பர்களையும் தன் குடும்பத்தார் வறுமை நிலையிலும் நன்றாக உபசரிப்பதை சோமு கவனிக்கிறான். தனக்கும் அவர்கள் நல்ல உணவைப் பரிமாறும் போது அவ்வுணவின் மீது நாட்டமில்லாதவன் போல அவன் நடந்து கொள்கிறான்.

**“நாங்கள் சாப்பிடுவதை சோமுவின் அக்கா பார்த்தபடியே இருந்தாள். சோமு மிகக் குறைவாகவே சாப்பிட்டான். (சிகப்பு மச்சம், பக்.106)**

**அவன் சைக்கிளை விட்டு இறங்கி, ‘டீ குடிச்சீங்களா?’ எனக்கேட்டான்....**

**சோமு அம்மாவிடம் பையை ஒப்படைத்துவிட்டு,‘எனக்கு டீ வேண்டாம்’ என்று சொன்னான்”(பக்.108 )**

**“சீனு கோழிக்குழம்பு எப்படிச் செய்வது எனப் பக்குவம் கேட்டுக் கொண்டிருந்தான். சோமுவின் அக்கா பக்குவம் சொன்னாள். சோமு எதையும் ருசித்துச் சாப்பிடவில்லை”(பக்.112)**

எனக் கதையில் அமையும் காட்சிகளிலிருந்து சோமு தன் வீட்டு உணவின் மீது நாட்டமில்லாதவனாக நடந்து கொண்டதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

தன் குடும்பத்தார் வறுமையிலும் கடன்களை வாங்கி சிரமப்பட்டுத் தயாரித்துக் கொடுத்த உணவை உண்ணாமல் ஒதுக்கும் சோமுவின் இத்தகைய நடத்தை எதார்த்தமானதல்ல. அது அவனது மனம் மேற்கொண்ட காப்பு உத்தியால் நிகழ்ந்ததாகும். அவன் தன் ஊரின் மீது மட்டுமல்லாமல் தன் குடும்பத்தின் வறுமை நிலையின் மீதும் வெறுப்புணர்வைக் கொண்டிருந்தான். இதனை,

**“எனக்கு இந்த ஊரு, வீடு. எதுவும் பிடிக்கலை. வீட்டை விட்டு நாலு தடவை ஓடிப்போயிருக்கேன் தெரியுமில்லே. சந்தேக கேஸ்ல போலீஸ்ல மாட்டுனதுதான் மிச்சம்... காசில்லாதவன் எல்லாம் படிக்கக் கூடாதுறா.. மீறி படிச்சா அவமானப்பட்டு தினம் தினம் சாகணும் என்றான் சோமு” (சிகப்பு மச்சம், பக்.109)**

என்னும் கூற்றிலிருந்தும்

**“‘பாம்பு கிடக்கப் போகுதுனுதான் டார்ச் கொண்டுகிட்டு வந்தேன்’ என்றார்.**

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.03*

**'பாம்பு கடிச்சி செத்தா செத்துட்டு போறோம்' என்றான் சோமு.**

**டார்ச் லைட்டை என்னுடைய கையில் கொடுத்தார் சோமுவின் அப்பா. அவரது கைகள் நடுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டேன். பாம்பை விட சோமுதான் அதிகம் கொத்துகிறான் என்பதுபோல சீனு முறைத்தான்" (சிகப்பு மச்சம், பக்.110)**

என்னும் உரையாடலில் இருந்தும் அறிய முடிகிறது.

சோமுவின் மனத்தில் தன் வீட்டின் மீதும் ஊரின் மீதும் இருந்த வெறுப்புணர்வு அவனது மனத்தில் மனத்தவிப்பை உருவாக்கி இருக்கிறது. அம்மனத்தவிப்பைத் தவிர்க்க, 'மறைமுகக் கோப வெளிப்பாடு' (Passive aggression) எனும் காப்பு உத்தியை அவன் தன்னை அறியாமல் பயன்படுத்தியுள்ளான்.

மறைமுகக் கோப வெளிப்பாடு என்பது ஒருவர் மீது தனக்கு ஏற்பட்ட உணர்வை மறைமுகமாக அவரிடம் வெளிப்படுத்துவதாகும். உதாரணமாக, ஒருவர் மீதுள்ள கோபத்தை நேரடியாக வெளிப்படுத்தாமல் மறைமுகமாக வெளிப்படுத்துவது, பொறுப்புகளைத் தள்ளிப் போடுதல், ஒதுக்கி விடுதல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இந்தக் காப்பு உத்தியின் பயன்பாட்டால் சோமு தன் வீட்டார் ஆசையாகத் தயாரித்த உணவைச் சரியாக உண்ணாமலும் அதனை ஒதுக்கியும் மறைமுகமாகத் தன் கோபத்தை வெளிப்படுத்தித் தன் வெறுப்புணர்வைத் தணித்துக் கொண்டிருக்கிறான் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

விடுமுறையை முடித்துக் கல்லூரிக்குத் திரும்பிச் செல்லும் நாளன்று சோமு, தன் நண்பர்களோடு கடுமையாகச் சண்டையிடுகிறான். அதோடு மட்டுமல்லால் கல்லூரிக்கு மீண்டும் படிக்கப் போகவும் மறுத்து விடுகிறான். அவன் இவ்வாறு நடந்து கொள்வதற்கு அவனது மனம் மேற்கொண்ட 'மடைமாற்றம்' (Displacement), 'பின்வாங்குதல்' (Withdrawal) எனும் காப்பு உத்திகள் காரணமாகின்றன. தன் குடும்பத்தின் வறுமை நிலையைத் தன்னால் மாற்ற முடியாமலிருப்பதால் அவனது மனத்தில் இயலாமைவுணர்வு ஏற்படுகிறது.

**"பாத்தேல்ல.. வீடு எப்படியிருக்குனு... வந்த ஆட்கள் உட்கார வைக்க சேர் கிடையாது. படுக்க வைக்க இடம் கிடையாது. இந்த லட்சணத்துல நான் படிக்கிற படிப்புக்கு என்ன பெரிசா வேலைக்கு போயிர முடியும்... என்னையும் ஏமாத்திகிட்டு வீட்டையும் ஏமாத்திகிட்டு இருக்கேன்" (சிகப்பு மச்சம், பக்.109)**

என்னும் சோமுவின் கூற்று அவனுடைய மனத்திலிருந்த இயலாமையுணர்வைக் காட்டுகிறது. இந்த இயலாமைவுணர்வால் மனத்தில் ஏற்பட்ட மனத்தவிப்பைப் போக்க மடைமாற்றம், பின்வாங்குதல் ஆகிய காப்பு உத்திகளை அவனது மனம் பயன்படுத்திக் கொள்கிறது.

**"அகத்தெழும் மனயெழுச்சி, ஏதேனும் புறக்காரணியால் தடை செய்யப்படும் போது அந்த மன எழுச்சியை வேறு ஒரு பொருளிற்கோ எண்ணத்திற்கோ மாற்றுவதன் மூலம்**

**மறைமுகமாக வெளியிடப்படுவதை இடப்பெயர்ச்சி அல்லது மடைமாற்றம் என்பர்" (காஞ்சனா, பக்.84)**

இவ்வுத்தியைக் கொண்டு சோமு, இயலாமைவுணர்வால் தன் மீது தனக்கே ஏற்பட்ட கோபத்தைத் தவிர்க்க தன் இரு நண்பர்கள் மீது அக்கோபத்தைத் திசைதிருப்பிக் கொண்டு, அவர்களைக் கடுமையாக ஏசி அவர்களோடு சண்டையிடுகிறான் என்பதைப் புரிந்து கொள்கிறான்.

**"வாயை மூடுறா... வந்தமா ஒரு வேளை சோறு தின்னமா கிளம்புனமானு இருக்கணும்... மூணு நாளைக்கு உட்காரவச்சி சோறு போடணும்னு எனக்கு தலையெழுத்தா...ஆமா... நீங்க எல்லாம் யாருடா? என் கூட படிச்சா, இப்படிதான் கூச்சமில்லாம வந்து தின்பீங்களா.... இந்த கறி, மீனு எல்லாம் எங்க இருந்து வந்துச்சி? வட்டிக்கு வாங்கிதானே செஞ்சிருக்காங்க. அதை யாரு கட்டுறது? ஓசி சோத்தை தின்னுட்டு வெட்கம் கெட்ட நாயிங்க பேச வந்துட்டீங்க" (சிகப்பு மச்சம், பக்.13)**

என்ற சோமுவின் கூற்று தன் மீது தனக்கு ஏற்பட்ட கோபத்தைத் தன் நண்பர்கள் மீது அவன் திசைதிருப்பிக் கொண்டதைக் காட்டுகிறது.

இந்தக் காப்பு உத்தியை மட்டுமல்லாமல் பின்வாங்குதல் எனும் உத்தியையும் சோமுவின் மனம் பயன்படுத்துகிறது. தன் இயலாமையுணர்வை முற்றிலுமாகத் தவிர்க்க அவனுடைய மனம் கல்லூரிக்குச் சென்று படிப்பைத் தொடர விரும்பாமல் படிப்பிலிருந்து பின்வாங்கிக் கொள்ள முடிவெடுக்கிறது.

**"உயிரிழப்பால், பிற துன்பங்களால் மனமுறிவுக்கு ஆட்பட்டவர்கள் வாழ்வில் விரக்கியுற்றுப் பற்றுக்களைத் துறந்து விலகி வாழ்வது துறப்பமைவு அல்லது பின்வாங்குதல் ஆகும்" (Abnormal Psycology, pp.112-113)**

இந்த உத்தியைப் பயன்படுத்திய சோமுவின் மனம் மனத்தவிப்பை முழுவதுமாகச் சமாளிக்க தன் கல்லூரிப் படிப்பைத் தொடர வேண்டாமென முடிவெடுக்கிறது.

**"'காசில்லேல்ல. பிறகு எதுக்கு என்ன பெத்தே, படிக்க வச்சே? காலேஜ்ல நான் என்ன பாடு படுறேனு உனக்கு தெரியுமா?'என கோபமாகக் கேட்டான் சோமு.**

**'எனக்கு எப்படிய்யா தெரியும். நீ சொன்னா தானே' என அப்பாவியாகக் கேட்டார் அவனது அம்மா.**

**'அந்த எழவை நான் வேற சொல்லணுமாக்கும். நான் படிக்க போகலை... படிச்ச வரைக்கும் போதும்.'**

**'அப்படி சொன்னா எப்படிய்யா. உன்னை நம்பி தானே நாங்க இருக்கோம்' என்றாள் அம்மா.**

**'யாரு இருக்க சொன்னது? நான் காலேஜ்க்கு போக மாட்டேன் போதுமா" என தன்**

**பையை வீசி எறிந்தான்...” (சிகப்பு மச்சம், பக்.113)**

என்னும் உரையாடல்களிலிருந்து சோமு தன்னுடைய இயலாமையால் உண்டான மனத்தவிப்பை முழுமையாகத் தவிர்க்க கல்லூரிப் படிப்பிலிருந்து பின்வாங்கிக் கொள்ள எண்ணுவதை அறிய முடிகிறது.

'பப்புவின் காலணி' என்கிற கதையில் வரும் கதை சொல்லி தம் மகளுக்காகப் பத்து வயது சிறுமி அணியக்கூடிய காலணிகளைத் தொடர்ந்து வாங்கிச் சேகரித்து வருகிறார். அவருடைய மகள் பத்து வயதில் கடைக்குச் செல்லும் போதெல்லாம் ஆசைப்பட்டுக் கேட்டுக் காலணிகளை வாங்கி வைத்துக் கொள்ளும் வழக்கத்தைக் கொண்டிருந்தாள்.

தம் மகள் வழக்கமாகக் கொண்டிருந்த பழக்கத்தைக் கதைசொல்லி தம்மை அறியாமல் செய்து வருகிறார். தம்முடைய மகளுக்கு இப்போது 37 வயது ஆகி இருந்தாலும் தொடர்ந்து அவர் பத்து வயது சிறுமிக்குரிய காலணிகளைச் சேகரிக்கிறார்.

**“'பப்பு உனக்காக இன்று காலையில் புது ஷூ ஒன்று வாங்கியிருக்கிறேன். உனக்குப் பிடித்திருக்கிறதா?' என வாட்ஸ்அப்பில் புகைப்படத்துடன் என் மகளுக்குத் தகவல் அனுப்பி வைத்தேன். அவள் லண்டனில் வசிக்கிறாள். மருத்துவராக இருக்கிறாள்.**

**மறுநிமிஷம் அவளிடமிருந்து பதில் தகவல் வந்தது.**

**'அப்பா.... என் வயது 37. நீங்கள் என்னை இன்னமும் சிறுமியாக நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் வாங்கிய ஷூ பத்து வயதுச் சிறுமி அணியக் கூடியது. இது இந்த ஆண்டில் நீங்கள் வாங்கிய பதினெட்டாவது ஷூ. உங்களை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை'” (சிகப்பு மச்சம், பக்.116)**

என்னும் உரையாடலிலிருந்து கதைசொல்லி தொடர்ந்து தன் மகளுக்காகப் பத்து வயது சிறுமிக்குரிய காலணிகளைச் சேகரித்து வருவதை அறிய முடிகிறது.

மேலும் கதைசொல்லி, தம் மகள் பெரியவளான பிறகு தம்மிடம் சிறிய வயதில் இருந்த ஒட்டுதலோடு இல்லை என்பதையும் அவர் உணர்கிறார்.

**“'இப்போ நீ எதுவும் என்கிட்ட கேட்கிறதேயில்லை' என்று சொல்வேன்.**

**'நான் ஒண்ணும் சின்னப்பிள்ளயில்லைப்பா' எனச் சிரிப்பாள்.**

**என் கழுத்தைக் கட்டிக்கொண்டு என் மடியில் தூங்கிய பெண் இவளில்லை. ஆனால் அந்தச் சிரிப்பு மட்டும் அப்படியே இருக்கிறது” (சிகப்பு மச்சம், பக்.118)**

ஆகிய கூற்றுகள் கதைசொல்லி தமக்கும் தமது மகளுக்கும் இடையே உருவாகியிருந்த இடைவெளியை அவர் உணர்ந்து கொண்டதை காட்டுகின்றன.

கதைசொல்லியின் மகள் மருத்துவரான பிறகு திருமணம் செய்து கொண்டு வெளிநாட்டில் வாழ்ந்து வருகிறாள். தம் மகளைப் பிரிந்து வாழும் சூழல் அவரது மனத்தில் மனத்தவிப்பை

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 04 (April -2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07042026.03*

உண்டாக்குகிறது.

**“சில வேளைகளில் வீட்டில் நானும் என் மனைவியும் மட்டும் இருப்பதை உணரும்போது ஊற்றில் தண்ணீர் கொப்பளிப்பதுபோல மனதில் துயரம் கொப்பளிக்கத் துவங்கும்” (சிகப்பு மச்சம், பக்.122)**

என்னும் கதைசொல்லியின் கூற்று அவரது மனத்தவிப்பை வெளிப்படுத்திக் காட்டுகிறது.

இச்சூழலில் கதைசொல்லி தம் மனத்தவிப்பைத் தவிர்க்க மறுத்தல் (Denial) எனும் காப்பு உத்தியைத் தன்னை அறியாமல் பயன்படுத்திக் கொள்கிறார்.

**“தனக்கு ஏற்புடையதற்ற உண்மைகளை, பிடிக்காத உண்மைகளை உண்மையாக ஏற்க மறுப்பது அல்லது அவை உண்மையல்ல என மறுப்பது அல்லது புறக்கணிப்பது மறுத்தல் ஆகும்” (காஞ்சனா, பக்.80)**

இந்தக் காப்பு உத்தியைப் பயன்படுத்திய அவரது மனம், தம் மகள் வளர்ந்து விட்டாள் என்பதை மறுத்து அவள் பத்து வயதில் ஆசையாகக் கேட்டு வாங்கிக் கொண்ட காலணிகளைத் தொடர்ந்து வாங்கிச் சேகரித்து வைக்குமாறு தூண்டுகிறது .

**“பப்பு சொல்வது உண்மை. அவள் வளர்ந்து பெரியவன் ஆகிவிட்டாள். திருமணமும் நடந்துவிட்டது. ஆனால் இவை எல்லாம் தெரிந்தபோதும் மனதில் அவள் சிறுமியாக உள்ள எண்ணம் மாறவேயில்லை. இப்போதும் கடைத்தெருவிற்குப் போகையில் எங்காவது அழகான சிறுமிகளின் காலணியைப் பார்த்துவிட்டால் உடனே இது பப்புவிற்கு அழகாக இருக்குமே என்று தோன்றுகிறது. உடனே என்னை அறியாமல் அந்த ஷூவை வாங்கியும் விடுவேன்” (சிகப்பு மச்சம், பக்.116)**

என்னும் கதைசொல்லியின் கூற்றிலிருந்து அவர் தம்முடைய மகளின் பிரிவால் உண்டான மனத்தவிப்பைத் தவிர்க்க நனவிலி நிலையில், தம் மகள் வளர்ந்து விட்டாள் என்ற உண்மையை ஏற்க மறுத்துப் பத்து வயதில் அவள் விரும்பிய காலணிகளை வாங்கிச் சேகரித்து வருகிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது,

**முடிவுரை**

சோமு மற்றும் கதைசொல்லி ஆகிய இரு ஆண் மாந்தர்களும் தங்களுடைய மனத்தவிப்புகளைத் தவிர்த்துக் கொள்ள காப்பு உத்திகளைப் பயன்படுத்துகிறார்கள். சோமு என்ற மாந்தர், மறைமுகக் கோப வெளிப்பாடு, மடைமாற்றம் மற்றும் பின்வாங்குதல் ஆகிய உத்திகளையும் கதைசொல்லி என்ற மாந்தர், மறுத்தல் ஆகிய உத்தியையும் பயன்படுத்துகிறார்கள். வையலன்டின் காப்பு உத்திப் பாகுபாட்டின் படி சோமு, முதிர்ச்சிப் பெறாத காப்பு உத்தியை (மறைமுகக் கோப வெளிப்பாடு) முதலில் பயன்படுத்தி, பின்பு நரம்பியல் சார்ந்த காப்பு உத்திகளைப் (மடைமாற்றம், பின்வாங்குதல்) பயன்படுத்துகிறான். கதைசொல்லி, நோயியல்

சார்ந்த காப்பு உத்தியைப் (மறுத்தல்) பயன்படுத்துகிறார். இம்மாந்தர்கள் தங்களது மனத்தைக் காக்கத் தேர்ந்தெடுத்துள்ள நரம்பியல் மற்றும் நோயியல் சார்ந்த காப்பு உத்திகளைக் குறித்து ஆராயும் போது அவர்களுக்குள் இருக்கும் ஒற்றுமையை அறிய முடிகிறது. அம்மாந்தர்கள் தங்களுக்கான சுயத்தைக் (Self) காக்கவே அத்தகைய காப்பு உத்திகளைப் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிய முடிகிறது. இதன்வழி, குடும்பத்தின் வறுமையைப் போக்க முடியாத தன் இயலாமையுணர்வினால் தன்னுடைய சுயம் பாதிப்படையும் போது சோமு, மடைமாற்றம் மற்றும் பின்வாங்குதல் ஆகிய காப்பு உத்திகளைக் பயன்படுத்துகிறான் என்பதும் மகளின் தனித்தியங்கும் நிலையும் அவளது பிரிவும் கதைசொல்லியின் சுயத்தைப் பாதிக்க, அவர் மறுத்தல் எனும் காப்பு உத்தியைப் பயன்படுத்துகிறார் என்பதும் ஆய்வின் வழி புலப்படுகின்றன.

**துணை நூல்கள்**


[1] அருண் குமார், ஜெ. "கு.அழகிரிசாமி கதைகளில் சிறார்களின் காப்பு உத்திகள்." *புதுப்புனல்*, மலர்: 14, இதழ்: 8, ஆகஸ்டு 2023, ISSN 2278 – 1641.

[2] இரவிச்சந்திரன், *தி.கு. புதுமைப்பித்தன் கனவும் உளப்பகுப்பாய்வு ஆய்வும்*. அலைகள் வெளியீட்டகம், சென்னை, முதல் பதிப்பு – 2017

[3] காஞ்சனா, இரா. "இலக்கியமும் உளவியலும் காப்பு உத்திகளும் படைப்பிலக்கியமும்." *தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் சமயம் தத்துவம் & உளவியல்*. செ.ஜீன் லாறன்ஸ், கு.பகவதி (பதி.). உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, முதல் பதிப்பு - 2007. பக்.66-86.

[4] காஞ்சனா, இரா. *இலக்கியமும் உளவியலும்*. விஷ்ணுப்ரியா பதிப்பகம், மதுரை, முதல் பதிப்பு – 1997.

[5] சாரதாம்பாள், செ. *இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்*. நியூ சென்சுரி புக் ஹவுஸ், சென்னை, முதல் பதிப்பு – 2017.

[6] ராமகிருஷ்ணன், எஸ். *எழுத்தே வாழ்க்கை*. தேசாந்திரி பதிப்பகம், சென்னை, மூன்றாம் பதிப்பு - 2019.

[7] ராமகிருஷ்ணன், எஸ். *சிகப்பு மச்சம்*. தேசாந்திரி பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு - 2018.

[8] ஜீவி. *ந.பிச்சமூர்த்தியிலிருந்து எஸ்.ரா. வரை*. சந்தியா பதிப்பகம், சென்னை, முதல் பதிப்பு - 2016.

[9] Vatsyayan. *Abnormal Psychology*. Kedar Nath Ram Nath Publishers, Meerut 1988-1989.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07042026.03*

**References**

[1] Arun Kumar, K. "Ku.Alagirisamy Kathaigalil Sirargalin Kappu Uthithigal." *Puthuppunal*, vol. 14, issue 8, August 2023, ISSN 2278 – 1641.

[2] Ravichandran, T.K. *Puthumaipithan kanavum ullappaguppaivu aaivum*. Alaigal Veliyeetagam, Chennai, First Edition – 2017.

[3] Kaanchana, R. *Ilakkiyamum Ulaviyalum*. Vishnupriya Pathipagam, Madurai, First Edition – 1997.

[4] Kaanchana, R. "Ilakkiyamum ullaviyalum kaapu uthigalum padaippilakkiyamum." *Tamiliyal Aaivu Sinthanaigal: Samayam, Thathuvam & Ullaviyal*. S. Jean Lawrence, K. Bagavathi (Editors). Ulaga Tamil Aaraichi Niruvanam, Chennai, First edition – 2007, pp. 66-86.

[5] Saarathambal, S. *Ilakiyamum Ulapaguppaivum*. New Centuary Book House, Chennai, First edition – 2017.

[6] Ramakrishnan, S. *Ezhuthe Vazhkai*. Desanthiri Pathippagam, Chennai, Third Edition – 2019.

[7] Ramakrishnan, S. *Sigappu Machcham*. Desanthiri Pathippagam, Chennai, First Edition – 2018.

[8] Jeevi. *Na.Pichamoorthyilirunthu S.Ra. varai*. Sandhya Publications, Chennai, First Edition - 2016.

[9] Vatsyayan. *Abnormal Psychology*. kedar Nath Ram Nath Publishers, Meerut 1988-1989.

Tamilmanam